# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:.............................................................

நேரம்: 150 மணித்துளிகள்

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர் மெய் எழுத்துகள் ______________ .

   ( 30, 216, 12 )

2. உணவுப் பொருட்களை உற்பத்தி செய்பவர் ______________ .

   ( நெசவாளர், பொற்கொல்லர், உழவர் )

3. எறும்புகள் ______________ ஊர்ந்து செல்லும் .

   ( சாரிசாரியாக, படிப்படியாக, விறுவிறுப்பாக )

4. கடலும் கடல் சார்ந்த இடமும் ______________ .

   ( நெய்தல், மருதம், குறிஞ்சி )

5. ஒன்று நூறாய் விளைவது ______________ .

   ( புல், கல், நெல் )

6. இளங்கோ ______________ நாட்டின் இளவரசன்.

   ( சோழ, சேர, பாண்டிய )

7. தவளை நீரிலும் நிலத்திலும் வாழும். ______________ ஓர் ஈரூடக உயிரி.

   ( அது, எது, உது )

8. ஆடற்குல ஆண்களைக் ______________ என்பர்.

   ( பாணர், கூத்தர், விறலியர் )

9. மீன்கள் ______________ சிக்கின.

( வலையில், வளையில், வழையில் )

10. தமிழர் சிற்பக்கலையில் மிகவும் திறனுடையவர்களாக ______________ .

( விளங்கினர், விளங்கினான், விளங்குவான் )

11. ஆழமற்ற கடலைப் ______________ என்று அழைப்பர்.

( பரவை, பறவை, ஆழி )

12. **பழமொழி:**

துறவிக்கு வேந்தன் ______________ .

( இரும்பு, கரும்பு, துரும்பு )

13. கண்பார்வை இழந்தோரும் கண்டு உணரும் கலை ______________ .

( சிற்பம், ஓவியம், நடனம் )

14. **விடுகதை:**

எண்ணெய் இல்லை; திரியுமில்லை; ஏற்றி வைக்க ஆளுமில்லை; ஆனாலும் அணையாமல் வெளிச்சம் தருவது ______________ .

( விளக்கு, கற்பூரம், கதிரவன் )

15. மாமி வீட்டு வேலைகளை ______________ என்று செய்து முடித்தார்.

( மடமட, மளமள, மலமல )

16. உலகில் அழியாமல் உயர்ந்து நிற்பது ____________________ .

( பணம், புகழ், மகிழ்ச்சி )

17. பாலைநிலச் செடிகளில் ஒன்று __________________ .

( நாகதாளி , கத்தரி , தக்காளி )

18. ஊர் மக்களுக்காக ஆடப்படுவது ________________ .

( வேத்தியல், பொதுவியல், அறிவியல் )

19. கேடில் விழுச்செல்வம் கல்வி என்று கூறியவர் ______________ .

( திருவள்ளுவர், பாவேந்தர், கபிலர் )

20. மாட்டுப்பொங்கலைப் __________________ என்பர்.

( தைப்பொங்கல், பட்டிப்பொங்கல், காணும்பொங்கல் )

21. தமிழ் + பாட்டு __________________ .

( தமிழ்பாட்டு, தமிழ்றபாட்டு, தமிழ்ப்பாட்டு )

22. ஆத்திசூடி __________________ எழுதப்பட்டது.

( ஔவையாரால், ஔவையாருக்கு, ஔவையாரது )

23. முல்லைநிலத்தின் சிறப்புக்குரிய மரம் __________________ .

( வாழை, வாகை, பனை )

24. நவில்தல் என்பது ________________ .

( சிரித்தல், அழுதல், கற்றல் )

25. மருதநில மக்கள் ________________ .

( குறவர், வேளாளர், ஆயர் )

26. நெல்லுடன் ________________ புல்லும் பயன் பெறும்.

( சேர்ந்த, விலகிய, ஆடிய )

27. ஒன்று திரண்டு எதிர்த்து நிற்பது ________________ என வள்ளுவர் கூறுகின்றார்.

( தடை, படை, கடை )

28. பனிகாலத்தில் சிறுவர் பனிப்பாவை ________________ மகிழ்வர்.

( படித்து, செய்து, வாழ்ந்து )

29. புனைவர் என்பதன் பொருள் ________________ .

( அணிவர், கூறுவர், பாடுவர் )

30. நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு எதிரிகளே இல்லையா? என்று பறவைகளிடம் கேட்ட விலங்கு ________________ .

( புலி, சிங்கம், மான் )

புள்ளிகள் 30

2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. நெசவாளர் ____________________ த் திரித்து ஆடைகள் செய்வர்.

( நூல் )

2. கொக்குகள் ____________________ பறக்கின்றன.

( வானம் )

3. நேற்றுப் பெய்த ____________________ குளங்கள் நிரம்பின.

( மழை )

4. நாம் என்றும்____________________ வாழ வேண்டும்.

( ஒற்றுமை )

5. மாவீரர்களை நினைக்கப் ____________________ இருக்கிறது.

( பெருமை )

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. இளங்கோவடிகளின் தந்தையின் பெயர் என்ன?

___

2. முல்லை நிலத்தின் நிலையான பறவை எது?

___

3. கலைகளில் அவள் ஓவியம் என்ற பாடலைப் பாடியவர் யார்?

___

4. குறிஞ்சி நில மக்களின் உணவுகள் எவை?

___

5. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்னும் பாடத்தில் பறவைகளின் மகிழ்வுக்கு கரணியம் என்ன?

___

___

6. கதிரவனால் எமக்குக் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

___

___

7. “தங்களுக்குப் பின் இளங்கோதான் பேரரசனாக வருவான்” எனக் கூறியவர் யார்?

___

புள்ளிகள் 10

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

## மாமரம்

| | | |
|---|---|---|
| நல்ல | கத்தியது | தாவி |
| இன்பம் | வளர்ந்து | |

அப்பா நாட்டிய சிறிய மரம்
அழகாய் ________________ பெரிதாகி
மாம்பழங்கள் அழகாய்த் தெரிகிறது
மனதுக்கு ________________ தருகிறது

பச்சை நிறத்துக் காய்களையும்
பழுத்த ________________ பழங்களையும்
உச்சி மரத்தில் அணில் ஒன்று
உண்ணத் ________________ ச் செல்கிறது

கீக்கீ என்று ________________
கிளை கிளையாகப் பாய்கிறது
அக்கா அண்ணா வாருங்கள்
அதை நாம் ஓடி விரட்டிடுவோம்

புள்ளிகள் 10

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| விலங்குகள் | உயிரி | தரை |
|---|---|---|
| நீர்வாழ்வன | ஆமை | |

உலகின் மேற்பரப்பு முழுவதும் நிலம் எனப்படும். அதற்குள் ஆறு, கடல், மலை என்பன அடங்கும். மண்ணை நாம் ______________ என்றே கூறுகின்றோம். இம்மண்ணில் பல உயிரிகள் வாழ்கின்றன. அவற்றை ______________, தரைவாழ்வன எனப் பிரிக்கலாம். சில உயிரிகள் நீரிலும் தரையிலும் வாழ்கின்றன. அவற்றை நாம் ஈரூடக ______________ என்கின்றோம். முதலை, ______________ போன்றவை ஈரூடக உயிரிகளாகும். தரைவாழ்வனவற்றை விலங்குகள், பறவைகள், சிற்றுயிரிகள் எனப் பகுக்கலாம். ஆடு, மாடு, புலி போன்றன ______________ . மயில், கிளி, கோழி போன்றன பறவைகள். எலி, எறும்பு, தேனீ போன்றன சிற்றுயிரிகள் ஆகும்.

புள்ளிகள் 10

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நீர் நிறைந்த ஆறுகள் ஒரு நாட்டின் சிறந்த செல்வம். ஆறுகள் நாட்டைச் செழிப்படையச் செய்கின்றன. நாட்டிற்கு அழகைத் தருகின்றன. அதனால் ஔவையார் ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' எனப் பாடினார். ஆறுகள் மலை உச்சியிலிருந்து பிறக்கின்றன. நன்னீரை ஏந்திச் செல்கின்றன. பள்ளங்களில் பாய்கின்றன. ஆறுகள் செல்லும் வழிகளில் நீரை ஊட்டுகின்றன. ஆற்று நீரால் நெல் விளைகிறது. கனிதரும் மரங்களும் காய்கறிச்செடிகளும் பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றன. அவற்றிலிருந்து பல உணவு வகைகளை நாம் பெற்றுக்கொள்கின்றோம். எமது பசியைப் போக்க ஆறுகள் உதவுகின்றன. இயற்கை அளித்த கொடைகளில் ஆறுகள் மிகவும் பயனுள்ளவை.

1. எவை நாட்டைச் செழிப்படையச் செய்கின்றன?

___________________________

2. ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' எனப் பாடியவர் யார்?

___________________________

3. ஆறுகள் எங்கிருந்து பிறக்கின்றன?

___________________________

4. ஆறுகள் செல்லும் வழிகளில் எதை ஊட்டுகின்றன?

___________________________

5. எவை பூத்துக் காய்த்துக் குலுங்குகின்றன?

___________________________

___________________________

புள்ளிகள் 10

7) **பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**சேந்தன் பெற்றோருடன் ஒவ்வொருநாளும் விளையாடப் பூங்காவுக்குச் செல்வான். அங்கு தன் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுவான். அவனுக்கு விருப்பமான விளையாட்டு பந்தடித்தல். அவன் மகிழ்ச்சியாக விளையாடுவான். விளையாட்டு ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும்.**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் கலைத்திறன்
- ✸ தைத்திருநாள்
- ✸ பழங்கள்
  - ➢ பழங்களின் பெயர்கள்
  - ➢ பழங்களில் உள்ள ஊட்டம் ( சத்துகள்)
  - ➢ பழங்கள் விற்கும் இடங்கள்
  - ➢ பழங்கள் உண்ணாவிடில் ஏற்படும் தீமைகள்
  - ➢ பழங்கள் உண்பதனால் ஏற்படும் நன்மைகள்

புள்ளிகள் 15